THE HINDU BusinessLine பக்கம்

| | பி.எஸ்.இ. | என்.எஸ்.இ. | டிஎல்எப் | ஹெச்டிஐஎல் |
|---|---|---|---|---|
| | 28067.31 | 8518.55 | 135.25 | 84.65 |
| | +517.78 | +162.7 | +21.00 | +8.55 |
| | +1.88% | +1.95% | +18.38% | +11.24% |

## பங்குச் சந்தை ஏற்றம்: முதலீட்டாளர்கள் மகிழ்ச்சி

**மும்பை**

வார இறுதி நாளான நேற்று இந்திய பங்குச் சந்தைகள் ஏற்றமான வர்த்தகத்தைக் கண்டன. மும்பை பங்குச் சந்தையின் சென்செக்ஸ் குறியீடு 517 புள்ளிகள் ஏற்றம் கண்டு 28067 புள்ளிகளில் முடிந்துள்ளது. பங்கு வர்த்தகர்களுக்கு இந்த ஆண்டில் அதிக லாபம் தந்த மூன்றாவது நாளாக நேற்று அமைந்தது. தேசியப் பங்குச் சந்தையின் குறியீடான நிப்டி 162 புள்ளிகள் ஏற்றம் கண்டு 8518 புள்ளிகளில் முடிந்துள்ளது. சுமார் 2 சதவீதம் அளவுக்கு பங்குச் சந்தைகள் ஏற்றம் கண்டிருந்தன.

நேற்றைய வர்த்தகத்தில் மும்பை பங்குச் சந்தையில் 1,791 பங்குகள் ஏற்றத்தையும், 1,055 பங்குகள் இறக்கமும் கண்டிருந்தன. மிட்கேப் குறியீடு 2.01 சதவீதமும், ஸ்மால் கேப் குறியீடு 1.4 சதவீதமும் அதிகரித்துள்ளது.

பஞ்சாப் நேஷனல் வங்கிப் பங்குகள் அதிகபட்சமாக 8.77 சதவீதம் லாபம் கண்டது. ஜூலை மாதத்துக்கான மொத்தவிலைக் குறியீடு -4.05 சதவீதமாக குறைந்துள்ளது. இதனால் ரிசர்வ் வங்கி வட்டிக்குறைப்பு நடவடிக்கை எடுக்க சாதமான சூழல் உருவாகி வருகிறது என முதலீட்டாளர்களின் எதிர்பார்ப்பும் சந்தை உயர்வுக்கு காரணம் என முகவர்கள் தெரிவித்தனர். நேற்றைய வர்த்தக நேர முடிவில் டாலருக்கு நிகரான ரூபாய் மதிப்பு 10 காசுகள் சரிந்து ரூ. 65 என்கிற அளவில் இருந்தது.

## அந்நிய செலாவணி

| விற்பனை விலை ரூபாயில் | |
|---|---|
| அமெரிக்க டாலர் | 65.12 |
| யூரோ | 72.79 |
| பவுண்ட் ஸ்டெர்லிங் | 101.85 |
| ஜப்பான் யென் (100 யூனிட்) | 52.47 |
| சிங்கப்பூர் டாலர் | 46.43 |
| மலேசிய ரிங்கட் | 16.01 |
| ஓமன் ரியால் | 169.68 |

தகவல் உதவி: இந்தியன் வங்கி

## தங்கம் – வெள்ளி

சென்னை

| தங்கம் | | ரூபாய் |
|---|---|---|
| 22 கேரட் | 1 கிராம் | 2,448 |
| 24 கேரட் | 10 கிராம் | 26,040 |
| வெள்ளி | 1 கிராம் | 38.75 |
| | 1 கிலோ | 36,205 |

# பொதுத்துறை வங்கிகளை சீரமைக்க 7 அம்ச திட்டம்

## மத்திய அரசு அறிவிப்பு

**புதுடெல்லி**

பொதுத்துறை வங்கிகளை சீரமைக்க ஏழு அம்ச திட்டத்தை மத்திய நிதி அமைச்சர் அருண் ஜேட்லி நேற்று அறிவித்தார். வங்கி தலைவர்களை நியமிப்பது, வங்கி வாரிய தலைமையிடம் (Bank Board Bureau), நிதி, கடன் நெருக்கடியைக் குறைப்பது, அதிகாரம், செயல்பாடுகளைக் கணக்கிடுதல் மற்றும் சீர்திருத்தம் உள்ளிட்ட ஏழு அம்சத் திட்டங்களை மத்திய அரசு அறிவித்தது. இதற்கு மிஷன் இந்திர தனுஷ் (Indradhanush) என்று பெயரிடப்பட்டிருக்கிறது.



▲ புதுடெல்லியில் ஏழு அம்ச திட்டத்தை அறிவிக்கும் (வலமிருந்து) மத்திய நிதித்துறை இணை அமைச்சர் ஜெயந்த் சின்ஹா, நிதி அமைச்சர் அருண் ஜேட்லி, நிதிச்சேவைகள் துறை செயலாளர் ஹஷ்முக் ஆதியா. படம்: கமல் நரங்

நாட்டின் பொருளாதாரத்தில் பொதுத்துறை வங்கிகளின் பங்கு இன்றி அமையாதது. கடந்த சில வருடங்களாகவே பொதுத்துறை வங்கிகள் பிரச்சினையில் இருக்கின்றன. ஒவ்வொரு காலத்திலும் தேவையான உதவியை மத்திய அரசு செய்துவருகிறது. பதற்றம் கொள்ளும் அளவுக்கு பொதுத்துறை வங்கிகளின் நிலைமை இல்லை என்று மத்திய நிதியமைச்சர் அருண் ஜேட்லி தெரிவித்தார்.

13 பொதுத்துறை வங்கிகளுக்கு நடப்பு நிதி ஆண்டில் 20,058 கோடி ரூபாய் மூலதன முதலீடு செய்யப்படும். எஸ்பிஐ வங்கி அதிகபட்சமாக ரூ.5,511 கோடி, பேங்க் ஆப் இந்தியா ரூ.2,455கோடி, ஐடிபிஐ வங்கி ரூ.2,229 கோடி, பஞ்சாப் நேஷனல் வங்கி ரூ.1,732 கோடி மற்றும் இந்தியன் ஓவர் சீஸ் வங்கியில் ரூ.2,009 கோடி முதலீடு செய்யப்படும்.

தவிர வங்கி வாரிய தலைமை அமைக்கப்படும். ரிசர்வ் வங்கி கவர்னர் தலைமையில் இவை செயல்படும். வங்கித் தலைவர்களை நியமிப்பது, பொதுத்துறை வங்கிகளை கண்காணிப்பது உள்ளிட்ட பணியை இந்த அமைப்பு செய்யும் என்றார். 2016-ம் ஆண்டு ஏப்ரல் முதல் இந்த அமைப்பு செயல்படத் தொடங்கும்.

1969-ம் ஆண்டு வங்கிகள் பொதுவுடமை ஆக்கப்பட்டதற்கு பிறகு செய்யப்படும் மிகப்பெரிய சீர்திருத்தம் இது என்று மத்திய நிதித்துறை இணை அமைச்சர் ஜெயந்த் சின்ஹா தெரிவித்தார்.

ஐந்து பொதுத்துறை வங்கிகளுக்கான தலைவர்களும் நேற்று அறிவிக்கப்பட்டனர். நிதிச் சேவைகள் துறை செயலாளர் ஹஷ்முக் ஆதியா இதனை அறிவித்தார். பொதுத்துறை வங்கியான பேங்க் ஆப் பரோடாவின் தலைவராக மைக்ரோசாப்ட் இந்தியாவின் முன்னாள் தலைவர் ரவி வெங்கடேசன் நியமிக்கப்பட்டிருக்கிறார். இன்னும் ஆறு மாதத்தில் ஆறு பொதுத்துறை வங்கிகளின் தலைவர்கள் நியமனம் செய்யப்படுவார்கள்.

ஐந்து பொதுத்துறை வங்கிகளின் தலைவர்களை தவிர இரண்டு பொதுத்துறை வங்கிகளுக்கு தலைமைச் செயல் அதிகாரிகளையும் மத்திய அரசு நியமனம் செய்திருக்கிறது. முதல் முறையாக தனியார் வங்கிகளில் பணிபுரிந்தவர்கள் தலைமைச் செயல் அதிகாரியாக நியமிக்கப்பட்டிருக்கிறார்கள்.

## இவரைத் தெரியுமா?

### பங்கஜ் ஆர் படேல்



- கெடிலா ஹெல்த்கேர் நிறுவனத்தின் தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர். ஸைடஸ் அனிமல் ஹெல்த் நிறுவனத்தின் தலைவராகவும் பொறுப்பு வகிக்கிறார்.
- உலக சுகாதார அமைப்பின் தென் கிழக்கு ஆசிய பிராந்தியத்துக்கு மண்டல பிரதிநிதியாகவும் உள்ளார்.
- டோரண்ட் பவர் நிறுவனத்தில் பொறுப்புகளற்ற இயக்குநராகவும் பதவி வகிக்கிறார்.
- டயல்பார் ஹெல்த் நிறுவனத்தில் இயக்குநராகவும், சிப்லா நிறுவனத்தில் பொறுப்புகளற்ற இயக்குநராகவும் பதவி வகித்தவர்.
- குஜராத் மாநில தொழில் வர்த்தக சபையின் தலைவராக 2006 லிருந்து பொறுப்பில் உள்ளார்.
- இந்தியத் தொழில் வர்த்தக சபைகளின் கூட்டமைப்பு, இந்திய மருந்து உற்பத்தியாளர்கள் சங்கம், மருந்து மற்றும் அழகு சாதனப் பொருள் ஏற்றுமதி மேம்பாட்டு சங்கம் என பல்வேறு அமைப்புகளில் முக்கிய பங்கு வகிக்கிறார்.
- மருந்தாளுனர் மற்றும் மேலாண்மை கல்வி நிறுவனங்களின் ஆலோசனைக் குழுக்களில் உள்ளார். சர்வதேச அளவில் 50க்கும் மேற்பட்ட ஆராய்ச்சிக் கட்டுரைகளை சமர்பித்துள்ளார்.
- 2004 ஆம் ஆண்டில் ஃபிக்கி வழங்கிய 'பார்மா மேன் ஆப் தி இயர்' விருதைப் பெற்றவர்.
- மும்பை பல்கலைக்கழகத்தில் பார்மஸி துறையில் உயர்கல்வி மற்றும் சட்டம் பயின்றவர்.

# ஏர் ஏசியா இந்தியா நிறுவனத்தில் பங்குகளை அதிகரிக்க டாடா திட்டம்

**புதுடெல்லி**

ஏர் ஏசியா இந்தியா நிறுவனத்தில் பங்குகளை உயர்த்தும் திட்டத்தில் டாடா குழுமம் இருக்கிறது. தற்போது ஏர் ஏசியா நிறுவனத்தில் 30 சதவீதம் அளவுக்கு டாடா குழுமத்தின் பங்கு இருக்கிறது. இதனை 41 சதவீதம் வரை உயர்த்த டாடா குழுமம் முடிவு செய்திருப்பதாகத் தெரிகிறது.

ஏர் ஏசியா நிறுவனத்தின் இன்னொரு முதலீட்டாளரான டெலஸ்ட்ரா டிரேட்பிளேஸ் நிறுவனத்தின் அருண் பாட்டியா 21 சதவீத பங்குகளை வைத்திருக்கிறார். இவரிடமிருந்து கணிசமான பங்குகளை வாங்க டாடா சன்ஸ் திட்டமிட்டிருப்பதாகத் தெரிகிறது. இருந்தாலும் இது குறித்த மற்ற தகவல்கள் ஏதும் வெளியாகவில்லை.

இது தவிர ஏர் ஏசியா இந்தியா நிறுவனத்தின் நிர்வாகம் முதல் முறையாக மாற்றி அமைக்கப்படும் என்றும் தெரிகிறது. நிறுவனத்தின் தற்போதைய தலைமைச் செயல் அதிகாரியான மித்து சாண்டில்யா நிர்வாக இயக்குநராக பதவி உயர்த்தப்படலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

நிறுவனத்தின் தலைமை நிதி அதிகாரி விஜய் கோபாலன் ராஜிநாமா செய்துவிட்டார். இவர் தனிப்பட்ட காரணங்களுக்கான ராஜிநாமா செய்திருக்கிறார். எங்களுடைய இயக்குநர் குழு புதிய தலைமை நிதி அதிகாரியை தேடும் பணியை தொடங்கி இருக்கிறது என்று ஏர் ஏசியா நிர்வாகம் தெரிவித்திருக்கிறது.

### ரூ.74 கோடி நஷ்டம்

மார்ச் 31-ம் தேதியுடன் முடிவடைந்த காலாண்டில் நிறுவனம் 19 கோடி ரூபாய் அளவுக்கு நஷ்டமடைந்திருக்கிறது. அந்த காலாண்டில் 74 கோடி ரூபாய் அளவுக்கு வருமானம் கிடைத்திருக்கிறது. இந்த காலாண்டில் 2.38 லட்சம் பயணிகள் பயணம் செய்திருக்கிறார்கள். சராசரியாக ஒரு பயணி மூலம் 3,131 ரூபாய் வருமானம் கிடைத்திருக்கிறது.

மே ஜூன் மாதத்தில் நிறுவனம் லாப பாதைக்கு திரும்பும் என்று நிறுவனத்தின் தலைமைச் செயல் அதிகாரி கடந்த பிப்ரவரி மாதத்தில் தெரிவித்தார். இந்த வருட இறுதிக்குள் விமானங்களின் எண்ணிக்கையை 7 முதல் 10 ஆக உயர்த்தத் திட்டமிட்டிருக்கிறது.

பிடிஐ

# செபி இயக்குநர் குழுவில் முன்னாள் ஆர்.எஸ்.எஸ். ஊழியர்

**புதுடெல்லி**

பங்குச்சந்தை ஒழுங்குமுறை ஆணையமான செபியின் இயக்குநர் குழுவில் மக்களவை சபாநாயகர் சுமித்ரா மகாஜனின் சகோதரர் அருண் சாத்தே இயக்குநராக நியமிக்கப்பட்டிருக்கிறார். இவரது நியமனம் அனைவரையும் வியப்பில் ஆழ்த்தியுள்ளது.

முன்னாள் ஆர்.எஸ்.எஸ். ஊழியரான (இவர் வழக்கறிஞரும் கூட) இவர் 1989-ம் ஆண்டு பாஜக சார்பில் வடக்கு மும்பை தொகுதியில் போட்டியிட்டவர். இப்போது பகுதிநேர உறுப்பினராக செபியின் இயக்குநர் குழுவில் நியமிக்கப்பட்டிருப்பதாக நிதி அமைச்சகம் தெரிவித்திருக்கிறது.



சமீபத்தில் அரசியல் நியமனங்கள் பெரும் சர்ச்சைக்கு உள்ளாகி வரும் சூழ்நிலையில் இவரை மத்திய அரசு நியமனம் செய்திருக்கிறது. செபியின் தற்போதைய தலைவர் யூ.கே. சின்ஹாவின் பதவிக் காலம் இன்னும் சில மாதங்களில் முடிவுக்கு வர இருக்கும் சூழ்நிலையில் இவரது நியமனம் முக்கியத்துவம் பெறுகிறது.

செபி சட்டத்தின் படி இயக்குநர் குழுவில் மத்திய அரசு ஐந்து நபர்களை நியமிக்க முடியும். இதில் மூவர் முழு நேர இயக்குநர் ஆவார்கள். இது தவிர செபி தலைவர், மூன்று நியமன உறுப்பினர்கள். ரிசர்வ் வங்கி, நிதி அமைச்சகம் மற்றும் கம்பெனி விவகாரத்துறை அமைச்சகம் ஆகியவற்றில் இருந்து தலா ஒரு இயக்குநர் இருப்பார்கள்.

இம்மாத இறுதியில் செபியின் இயக்குநர் குழு கூட்டத்தில் கலந்துகொள்ள இருக்கும் அருண் சாத்தே, சில நிறுவனங்களின் இயக்குநர் குழுவிலும் இருக்கிறார்.

பிப்ரவரி 2016-ம் ஆண்டு தற்போதைய தலைவர் யூ.கே. சின்ஹாவின் பதவிக் காலம் முடிவுக்கு வருகிறது. அந்த சமயத்தில் அரசாங்கம் மேலும் ஒருவரை நியமிக்கலாம். அதே சமயத்தில் சின்ஹாவுக்கு மேலும் ஒருவருடம் வரை பதவி நீட்டிப்பு வழங்கவும் வழி இருக்கிறது.

அருண் சாத்தே தகுதியான நபராக இருந்தாலும், அவரது அரசியல் ரீதியான தொடர்புகள் அனைவரது கவனத்தையும் ஈர்த்து உள்ளது.

பிடிஐ

### என்ன தவறு?

நான் ஆர்.எஸ்.எஸ்.காரணாக இருப்பதில் என்ன தவறு இருக்கிறது என்று அருண் சாத்தே கேள்வி எழுப்பி இருக்கிறார். பாஜகவின் தேசிய செயல் குழுவில் உறுப்பினராக இருக்கிறேன். நான் ஆர்.எஸ்.எஸ்.காரண்தான் இதில் என்ன தவறு. விதிமுறைகளுக்கு ஏற்ப நான் பணி செய்யப்போகிறேன்.

நான் செபியில் வேலை செய்யவில்லை. நிதி அமைச்சகத்தால் நியமிக்கப்பட்டிருக்கிறேன். செபியின் சட்டங்களுக்கு ஏற்ப பணியாற்றப்போகிறேன் என்று தெரிவித்திருக்கிறார்.

### நியமனம் சரியே: நிதி அமைச்சகம்

அருண் சாத்தேயின் நியமனம் சரியே என்று நிதிமைச்சகம் தெரிவித்திருக்கிறது. செபியின் பகுதி நேர உறுப்பினர் பதவிக்கு அவர் தகுதியான நபர்தான். இவரது நியமனத்தில் சர்ச்சை எழ காரணமே இல்லை. அவரை பற்றி விசாரித்த பிறகே நியமனம் செய்யப்பட்டார் என்று நிதித்துறை செயலாளர் ராஜிவ் மெஹ்ரிஷி தெரிவித்தார்

# இந்திய வளர்ச்சி உலகத்துக்கே ஒரு நற்செய்தி

குர்சரண் தாஸ்

இவ்வொரு சுதந்திர தினமும், நாடு இதுவரை அடைந்துள்ள வளர்ச்சியை அசைபோடுவதற்கு நல்லதொரு வாய்ப்பு; அன்றாட நிகழ்ச்சிகள் குறித்துக் கவலைப்படுவதை நிறுத்திவைத்து கடந்த 68 ஆண்டுகளில் ஒவ்வொரு துறையிலும் நாம் அடைந்துள்ள முன்னேற்றத்தை அல்லது தேக்க நிலையை ஆராய்வது நல்லது. சுதந்திர இந்தியாவின் வரலாற்றில் 3 பெரிய திருப்புமுனைகள் இடம்பெற்றுள்ளன. 1947 ஆகஸ்டில் 'அரசியல் சுதந்திரம்' பெற்றோம்; 1991 ஜூலையில் 'பொருளாதாரச் சுதந்திரம்' பெற்றோம்; 2014 மே மாதம் 'கண்ணியத்தை' மீட்டுக்கொண்டோம்.

### தேர்தல் முடிவு

கடுமையான உழைப்பால் முன்னுக்கு வந்த 'தேநீர் வியாபாரி'யின் அரசியல் வெற்றியானது மனிதர்களின் தனிப்பட்ட கண்ணியம் எவ்வளவு முக்கியமானது என்பதை உணர்த்திற்று. சுய உழைப்பால் நடுத்தர வர்க்கமாக முன்னேறிய கோடிக்கணக்கான மக்களின் எண்ணவோட்டத்துக்கு ஏற்ப கடந்த மக்களவை பொதுத் தேர்தல் முடிவுகள் அமைந்தன. பீடா விற்போர், ஆட்டோ ஓட்டுவோர், வீதிகளிலேயே அலைந்து திரிந்து வேலை செய்வோர் என்றாலே நமக்கிருந்த இளக்காரத்தை மாற்றிக்கொள்ள வேண்டிய நிலையை அந்த முடிவு ஏற்படுத்தியது.


### தேக்க நிலையிலிருந்து மாற்றம்

நாடு சுதந்திரம் பெற்றவுடன், ஜவாஹர்லால் நேரு உருவாக்க விரும்பிய 'நவ பாரதம்' ஏற்படும் என்று நம்பியவர்களில் நானும் ஒருவன். அப்போது நாங்கள் 'சோஷலிஸ்டுகள்'. ஆண்டுகள் செல்லச்செல்ல, நேருவின் 'கலப்புப் பொருளாதாரக் கொள்கை' நம்மை முட்டுச் சந்துக்குக் கொண்டுபோவதை உணர்ந்தோம்.

சோஷலிசத்தை அடைவதற்குப் பதிலாக தேக்கநிலையை அடைந்தோம். அதைத்தான் கேலியாக, 'லைசென்ஸ் ராஜ்' என்று அழைத்தார்கள். 1991-ல் கொண்டுவரப்பட்ட பொருளாதாரச் சீர்திருத்தம் அந்த வேதனையை முடிவுக்குக் கொண்டுவந்தது. அன்றிலிருந்து பொருளாதார ரீதியாக இந்தியா உயர்ந்து வருகிறது. சுதந்திரம், ஜனநாயகம் என்ற இரு அஸ்திவாரங்களின் மீது 'சுதந்திரச் சந்தை' இங்கே செயல்படத் தொடங்கிவிட்டது. உயிர்த்துடிப்புள்ள நம்முடைய ஜனநாயகத்துக்கு நேருதான் அடித்தளமிட்டுக் கொடுத்தார்; பொருளாதாரத்தைக் கட்டிவைத்த கொள்கைகளைத் தளர்த்திய பிறகே நம் நாட்டுக்கு வளம் பெருகத் தொடங்கியது.

### சீரான வளர்ச்சி

130 கோடி மக்களைக் கொண்ட, சந்தைக்கடை இரைச்சலை மிஞ்சுகிற ஒரு ஜனநாயக நாடு எப்படி உலகின் வேகமாக வளரும் பொருளாதார நாடாக இருக்க முடிகிறது என்று உலகத்தாரால் புரிந்துகொள்ள முடியவில்லை. இந்தியா அமல்படுத்திய அதே சீர்திருத்தங்களை கிட்டத்தட்ட வேறு 60 நாடுகளும் அமல்படுத்தின. ஆனால் இந்தியாவில் மட்டும் பொருளாதாரம் வேகம் பெற்றது. இந்தியத் தொழிலதிபர்கள் உத்வேகம் பெற்று கடுமையான தொழில் போட்டிக்குத் தயாராவார்கள், உற்பத்தியைப் பெருக்கி லாபம் சம்பாதிப்பார்கள் என்று யாருமே எதிர்பார்க்கவில்லை. சீனத்தில் வளர்ச்சிக்கான திட்டங்கள் 'மேலிருந்து கீழே' திணிக்கப்பட்டபோது, இந்தியாவில் 'கீழிருந்து மலர்ந்து' மேலே படர்ந்து கிளை பரப்பியது. ஏழைகளால் சுயகட்டுப்பாட்டுடன் உழைத்து தங்களைத்தாங்களே முன்னுக்குக் கொண்டுவர முடியாது என்பதைப் பொய்யாக்கி வருகிறது இந்தியா.



### நினைக்க வேண்டிய நேரமிது

மக்கள் தனக்கு ஏன் வாக்களித்தார்கள் என்பதை மோடி நினைத்துப் பார்க்க வேண்டிய நேரம் இது. ஒவ்வொரு முறை 'இந்துத்துவா' என்று சொன்னபோதும் 'வளர்ச்சி' என்ற சொல்லையும் சேர்த்தே உச்சரித்து பிரசாரம் செய்தார். இப்படி 500 முறை பேசியிருப்பதாக டாக்டர் வால்டர் ஆண்டர்சன் என்ற அமெரிக்க வெளியுறவுத்துறை முன்னாள் அதிகாரி, கணினி உதவியுடன் கணக்கெடுத்துச் சொல்கிறார். 'வளர்ச்சி' என்பது போட்டிகள் நிலவும் சந்தையில் கிடைக்கும் 'வாய்ப்பு' என்பதற்கான சங்கேத வார்த்தை. 'இன்ஸ்பெக்டர் ராஜ்' ஒழிக்கப்படும் என்றார் மோடி. அதை இன்னமும் அமல்படுத்தவில்லை. முன்தேதியிட்டு வரி வசூலிக்கும் நடைமுறையும் அப்படியே நீடிக்கிறது. தொழில், வர்த்தகம் செய்ய ஏற்ற இடமாக இந்தியா மாறாமல், விரோதப் போக்கே தொடர்கிறது.

### விவரம் தேவை

புதிய திட்டத்தையோ வழிமுறையையோ சுதந்திர தினத்தன்று பிரதமர் மோடி அறிவிக்க வேண்டும். 2014 மே தொடங்கி அறிவித்த பல்வேறு திட்டங்கள் இப்போது எந்த நிலையில் அமலாகின்றன என்ற விவரத்தைத் தர வேண்டும். தொழில் செய்வதற்குத் தடையாக உள்ள அம்சங்கள் எந்த அளவுக்கு நீக்கப்பட்டிருக்கின்றன என்று தெரிவிக்க வேண்டும். குஜராத்தில் அவர் செய்த சாதனைகளுக்காகத்தான் தேர்ந்தெடுக்கப்பட்டார். ஒரு திட்டத்தைத் தீட்டுவதைவிட, அறிவிப்பதைவிட செயல்படுத்துவதுதான் முக்கியம். குஜராத்தில் அதில் சிறந்து விளங்கினார்.

### பாரபட்சம் கூடாது

பிரிட்டனில் மார்கரெட் தாட்சரும் சீனத்தில் டெங் சியோ பிங்கும் சந்தைப் பொருளாதாரத்தை ஊக்குவித்ததைப்போல மோடியும் செயல்பட வேண்டும். சந்தைப் பொருளாதாரத்தில் பணக்காரர்கள் பெரும் பணக்காரர்களாகின்றனர், ஏழைகள் பரம ஏழைகளாகின்றனர் என்றே மக்கள் நினைக்கின்றனர். இதனால் சீர்திருத்தம் என்றாலே சந்தேகக் கண் கொண்டு பார்க்கின்றனர். தொழில் வளர்ச்சியால் உருவாகும் செல்வம் முறையாகப் பகிர்ந்தளிக்கப்பட வேண்டும். 'மன்-கி-பாத்' (மனதிலிருப்பதைப் பேசுகிறேன்) என்ற அவருடைய நிகழ்ச்சி நல்ல வரவேற்பைப் பெற்றிருக்கிறது.

சுதந்திரச் சந்தைக்குச் சாதகமாக இருப்பது, தொழிலதிபர்களுக்குச் சாதகமாக இருப்பதாகிவிடாது என்று மக்களுக்கு அவர் விளக்க வேண்டும். சுதந்திரச் சந்தையில் போட்டி இருக்கும், குறைந்த செலவில் தயாரித்து, குறைந்த லாபத்தில் விற்க வேண்டும். அது நுகர்வோர்களுக்குத்தான் நன்மை தரும். முதலாளித்துவம் என்பது தன் போக்கில் செயல்பட முடியாமல் விதிகளின்படி செயல்பட்டாக வேண்டும். தொழிலதிபர்கள் சார்ந்த நிர்வாகம் என்றால் அதிகாரிகளும் அரசியல் தலைவர்களும்தான் அதிகாரங்களைக் கையில் வைத்திருப்பார்கள். அவர்கள் தொழிலதிபர்களுக்குச் சார்பாக மட்டும் செயல்படுவார்கள். இதைத்தான் 'சலுகைசார் முதலாளித்துவம்' (குரோனி கேபிடலிசம்) என்று சாடுகின்றனர்.

### தருமத்தின் சாரம்

அரசியல் சட்டப்படிதான் நாட்டின் நிர்வாகம் இருக்கும் என்பதை உறுதிப்படுத்த வேண்டும். தண்டனைகளுக்காக அஞ்சி மட்டுமல்ல மக்கள் சட்டத்தைப் பின்பற்றுவது, சட்டம் நியாயமானது என்று உணர்ந்ததாலேயே பின்பற்றுகின்றனர்.

நிர்வாக சீர்திருத்தம் என்பது இந்தியர்கள் கடைப்பிடித்து வரும் தார்மிகக் கொள்கைகளின் பேரில் மேற்கொள்ளப்பட வேண்டும். மேலை நாடுகளின் அரசியல் சட்டம் புனிதமானது என்ற கொள்கை மக்களிடம் எதிரொலிக்கவில்லை; சட்டத்தைவிட தர்மத்தின்படி நடக்க வேண்டும் என்பதே மக்களுடைய சிந்தனையாக இருந்தது. இதைப் புரிந்துகொண்ட காந்திஜி, சாதாரண தர்மத்தையே மிகப்பெரிய அறமாக முன்வைத்தார். இந்த தர்மம்தான் மக்களுடைய வாழ்க்கையில் சுகத்தையும் சௌஜன்யத்தையும் அமைதியையும் அளித்தது. மக்கள் தங்களைத் தாங்களே கட்டுப்படுத்திக்கொண்டு சமூக அமைதிக்கு ஒத்துழைத்தார்கள். இதனால்தான் நம்முடைய அரசியல் சட்டத்தை வகுத்த மேதைகள், தர்மச் சக்கரத்தை தேசியக் கொடியின் மையத்திலேயே பொறித்தார்கள். நம்முடைய அரசியல் சட்டம் என்பதே தருமத்தின் சாரம் என்று அழைத்தார் பாரத் ரத்னா விருதுபெற்ற பி.வி. காணே.

தீண்டாமையை ஒழிக்க முடியாமல் காந்திஜி தோற்றிருக்கலாம், சுதந்திரப் போராட்டத்துக்கு உயிர் கொடுத்தவர் அவர்தான். அதே போன்ற உணர்வை நம்முடைய அரசியல் சட்டத்தைப்பற்றியும் நம்முடைய இளைய தலைமுறைக்கு நாம் ஊட்ட வேண்டும். சட்டத்தை மதித்து நடக்கும் எண்ணம் மக்களுடைய இதயங்களிலிருந்து வர வேண்டும்.

### நற்செய்தி

பொருளாதார ரீதியாக இந்தியா வளர்வதுதான் என்னுடைய வாழ்க்கையில் முக்கியமான காலகட்டம். இது நமக்கு மட்டுமல்ல உலகத்துக்கே நற்செய்திதான். முதலாளித்துவக் கொள்கையைக் கடைப்பிடிக்கும் மேற்கத்திய நாடுகள் மேற்கொண்டு செயல்பட முடியாமல் வேதனையில் துடித்துக் கொண்டிருக்கும்போது, கிழக்கில் உள்ள மிகப்பெரிய நாடு அரசியல், பொருளாதார சுதந்திரக் கருத்துகளின் அடிப்படையில் வளர்ந்து வருகிறது; வெளிப்படையான சுதந்திரச் சமூகங்களும், தடையற்ற வர்த்தகமும், உலகப் பொருளாதாரத்துடனான பன்முக இணைப்பும்தான் தேசத்தின் வெற்றிக்கும் நிரந்தரமான வளத்துக்கும் காரணமாக இருக்க முடியும் என்று உணர்த்துகிறது.

gurcharandas@gmail.com